



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 126 01.11.2025 சனிக்கிழமை ▸Chennai ▸Volume: 01 ▸Issue: 126 ▸Saturday ▸pages 4 ▸Rs.5/-

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(1–11–2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி–15
பிறை: வளர்பிறை
திதி
ஏகாதசி பின்னிரவு 3.18 வரை
பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
சதயம் பிற்பகல் 2.47 வரை
பிறகு பூரட்டாதி
யோகம்
அமிர்த/ மரணயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் –கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | அமைதி |
| சிம்மம் | ஆர்வம் |
| கன்னி | சுபம் |
| துலாம் | முயற்சி |
| விருச்சிகம் | தாமதம் |
| தனுசு | ஆக்கம் |
| மகரம் | பெருமை |
| கும்பம் | நிறைவு |
| மீனம் | உவகை |

## ‘1 கோடி அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9000’

# பிஹாரில் தே.ஜ. கூட்டணியின் தேர்தல் அறிக்கை!

**பாட்னா,நவ.1:**

பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டு தேர்தல் அறிக்கையை தேசிய ஜனநாயகக் கூட்டணி இன்று வெளியிட்டது. ஒரு கோடி இளைஞர்களுக்கு அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9 ஆயிரம் நிதியுதவி உள்ளிட்ட வாக்குறுதிகள் இந்த 69 பக்க தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

2025 பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கான கூட்டு தேர்தல் அறிக்கை இன்று (அக்டோபர் 31) வெளியிடப்பட்டது. பாட்னாவில் பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, முதல்வர் நிதிஷ் குமார், எல்ஜேபி தலைவர் சிராக் பாஸ்வான், பிஹார் பாஜக தேர்தல் பொறுப்பாளர் தர்மேந்திர பிரதான் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.



தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைத்த பின்னர் 1 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கப்படும். திறன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

வெள்ள மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நதி இணைப்புத் திட்டங்கள், கரைகள் மற்றும் கால்வாய்கள் விரைவாக கட்டப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் வெள்ளம் இல்லாத பிஹார் என்று இலக்கு எட்டப்படும்.

இலவச ரேஷன், 125 யூனிட் இலவச மின்சாரம், ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவ சிகிச்சை, ரூ.5 லட்சத்தில் புதிய வீடுகள் மற்றும் ஏழைகளுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் ஆகியவை உறுதியளிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பல்வேறு சாதிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மதிப்பிடுவதற்கும், அவர்களின் அதிகாரமளிப்புக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு பரிந்துரைப்பதற்கும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்படும். இதன்மூலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (EBC) பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வரை உதவித் தொகை வழங்கப்படும். முதல்வரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், பெண்களுக்கு ரூ.2 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படும். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு கோடி 'லட்சாதிபதி பெண்களை' உருவாக்கும். 'மிஷன் கோடீஸ்வரர்' திட்டம் மூலம் பெண் தொழில்முனைவோர் கோடீஸ்வரர்களாக மாற்றப்படுவார்கள்.

பாட்னா, தர்பங்கா, பூர்னியா மற்றும் பாகல்பூரில் சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்படும். இந்த நான்கு நகரங்களில் மெட்ரோ திட்டங்கள் அமைக்கப்படுவதோடு, ஏழு விரைவுச் சாலைகளை அமைக்கவும், 3,600 கி.மீ ரயில் பாதைகளை நவீனமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விமான இணைப்பு மேலும் 10 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் மற்றும் 10 புதிய தொழில்துறை பூங்காக்கள் கட்டப்படும். கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் குறைந்தது 100 சிறு, குறு தொழில் பூங்காக்கள் மற்றும் 50,000 க்கும் மேற்பட்ட குடிசை தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

உலகத் தரம் வாய்ந்த மருத்துவம் வழங்கப்படும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.


அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும். கர்புரி தாக்கூர் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3,000 வழங்கப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஆண்டு உதவித்தொகை ரூ.6,000 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தும்.

மீனவர்களுக்கான உதவி ரூ.4,500 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தப்படும். மாநிலத்தின் விவசாய உள்கட்டமைப்பில் ரூ.1 லட்சம் கோடி முதலீட்டை அரசாங்கம் உறுதி செய்யும்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஒரு கல்வி நகரத்தை உருவாக்கவும், உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களின் வளாகங்களை பிஹாரில் திறக்கவும் திட்டமிட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'கேஜி முதல் பிஜி' வரை இலவச மற்றும் தரமான கல்வி, பள்ளிகளில் மதிய உணவுடன் சத்தான காலை உணவு ஆகியவை வழங்கப்படும்.

பட்டியல் சமூக பிரிவு மாணவர்களுக்கு குடியிருப்புப் பள்ளிகள் திறக்கப்படும். உயர்கல்வி பயிலும் பட்டியல் சமூக மாணவர்களுக்கு ரூ.2,000 மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும். சீதை பிறந்த இடம் 'சீதாபுரம்' என்று அழைக்கப்படும். அது உலகத் தரம் வாய்ந்த ஆன்மீக நகரமாக மேம்படுத்தப்படும்.

## சர்தார் வல்லபாய் படேல் பிறந்தநாள்: பிரதமர் மோடி மரியாதை



**கெவாடியா,நவ.1:**

இந்தியாவின் முதல் துணை பிரதமரும் உள்துறை அமைச்சருமான சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. வல்லபாய் படேலின் பிறந்தநாள் தேசிய ஒருமைப்பாட்டு நாளாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் குஜராத் மாநிலத்தில் கெவாடியா பகுதியில் உள்ள வல்லபாய் படேலின் பிரமாண்ட சிலைக்கு பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சர்தார் வல்லபாய் படேலின் பிரம்மாண்ட சிலைக்கு ஹெலிகாப்டரில் இருந்து மலர் தூவப்பட்டது.

## இந்திரா காந்தி நினைவு தினம்: நினைவிடத்தில் சோனியா, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் அஞ்சலி



**புதுடில்லி,நவ.1:**

இந்தியாவின் முதல் பெண் பிரதமரான இந்திரா காந்தி, கடந்த 1984-ம் ஆண்டு அக்டோபர் 31-ந்தேதி தனது பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 41-வது நினைவு நாளான இன்று காங்கிரஸ் தலைவர்கள் அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

டெல்லியில் உள்ள இந்திரா காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி, தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## நாட்டில் தங்கத்தின் தேவை 16 சதவீதம் வீழ்ச்சி: உலக தங்க கவுன்சில் தகவல்

**புதுடில்லி,நவ.1:**

இந்தியாவில் இந்த நிதியாண்டின் 2-ம் காலாண்டில் தங்கத்தின் தேவை 16 சதவீதம் குறைந்துள்ளது. தங்கம் விலை வரலாற்று உச்சத்தைத் தொட்டதால் நுகர்வோரின் வாங்கும் ஆர்வம் மந்தமானது.

அதன் தரவுகளின்படி, 2-ம் காலாண்டில் தங்கத்தின் மொத்த தேவை கடந்தாண்டின் 248.3 டன்னிலிருந்து 209.4 டன்களுக்கு குறைந்தது. இது 16 சதவீதம் குறைவாகும். ஆனால், விலை அடிப்படையில் தேவையின் மதிப்பு 23 சதவீதம் உயர்ந்து ரூ.2,03,240 கோடியாக உயர்ந்தது (கடந்த ஆண்டு ரூ.1,65,380 கோடி). உலகின் 2-வது பெரிய தங்க நுகர்வோர் சந்தையாக உள்ள இந்தியாவில் தங்க நகை தேவை 31 சதவீதம் குறைந்து 171.6 டன்னிலிருந்து 117.7 டன்களாக வீழ்ந்தது. எனினும், நகை வாங்குதலின் மதிப்பு சுமார் ரூ.1,14,270 கோடியில் நிலைத்திருந்தது. ஏனென்றால் வாங்குபவர்கள் உயர்ந்த விலைக்கு வாங்கவும் தங்களை தயார்படுத்தி கொண்டனர்.

மாறாக, தங்கத்தின் முதலீட்டு தேவை வலுவாக இருந்துள்ளது. தங்கத்தின் மீதான முதலீடு 20 சதவீதம் அதிகரித்து 91.6 டன்களாகவும், மதிப்பில் 74 சதவீதம் உயர்ந்து ரூ.51,080 கோடியில் இருந்து ரூ.88,970 கோடியாகவும் உயர்ந்ததாக உலக தங்க கவுன்சில் தெரிவித்தது. பாதுகாப்பான முதலீடாக கருதப்படுவதால் முதலீட்டு வாங்குதல் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் என்பதையே மறந்துவிடுகிறார்; மோடி தனது மாண்பை இழந்துவிடக் கூடாது

### முதல்வர் கண்டனம்

**சென்னை,நவ.1:**

தமிழ்நாட்டில் பிகார் மக்கள் துன்புறுத்தப்படுவதாக பிரதமர் பேசியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி பிகார் மாநிலத்தில் பிரசாரம் மேற்கொண்டபோது, 'தமிழ்நாட்டில் வேலை செய்யும் உழைக்கும் பிகார் மக்களை திமுகவினர் துன்புறுத்துகின்றனர்' என்று பேசியிருந்தார். பிரதமரின் இந்த பேச்சுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுபற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில்,

“இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா - பிகார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.க.,வினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதலமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்” என்று பதிவிட்டுள்ளார். மேலும் பிரதமர் பேசிய காணொளியையும் வெளியிட்டுள்ளார்.






## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புதிய தலைமுறை இதய ஸ்டென்ட்டுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளது

**சான்பிரான்சிஸ்கோ,நவ.1:**

: இதய சிகிச்சை நிபுணர்களின் உலகளாவிய மாநாடு அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் டெல்லி பத்ரா மருத்துவமனை டீனும், இதய சிகிச்சை நிபுணருமான டாக்டர் உபேந்திர கவுல், டுக்ஸ்டோ-2 என்ற பெயரில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளை தாக்கல் செய்தார். இந்த பரிசோதனை டாக்டர் கவுல் தலைமையில் நடைபெற்றது. இதில் துணைத் தலைவராக பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் பால், திட்ட இயக்குனராக டாக்டர் பிரியதர்ஷினியும் பணியாற்றினர்.

இந்த பரிசோதனையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புதிய தலைமுறை இதய ஸ்டென்ட் 'சுப்ராப்ளக்ஸ் க்ரஸ்' மற்றும் சர்வதேச சந்தையில் கிடைக்கும் அமெரிக்க தயாரிப்பு 'ஜீயன்ஸ்' இதய ஸ்டெண்ட்டும் தீவிரமாக ஒப்பிடப்பட்டது. அப்போது டாக்டர் கவுல் கூறியதாவது:



இந்தியாவில் 66 இதய சிகிச்சை மையங்களில் இந்த பரிசோதனை நடத்தப்பட்டது. நீரிழிவு மற்றும் இதயத்துக்கு ரத்தம் செலுத்தும் 3 முக்கிய நாளங்களிலும் அடைப்பு உள்ளவர்களுக்கு இந்திய தயாரிப்பு ஸ்டென்ட் பொருத்தி பரிசோதிக்கப்பட்டது. இவர்களில் 80 சதவீதம் பேர், 3 முக்கிய ரத்த நாளங்களிலும் அடைப்பு உள்ளவர்கள். இந்த பரிசோதனை இந்திய தயாரிப்பு 'சுப்ராபிளக்ஸ் க்ரஸ்' ஸ்டென்ட், சர்வதேச தரத்திலான ஸ்டென்ட்டுக்கு எந்த விதத்திலும் குறைவு இல்லை என்பதை நிரூபித்தது. குஜராத்தின் சூரத் நகரில் இந்த ஸ்டென்ட் தயாராகிறது. இவ்வாறு டாக்டர் கவுல் கூறினார்.




## திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு ஸ்ரீசத்ய நாராயணர் சிறப்பு வழிபாடு





**கடலூர், நவ.01:** கடலூர் மாவட்டம் விருத்தாசலம் திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சத்யநாராயணர் பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் ஸ்ரீ சத்தியநாராயணருக்கு வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து துளசி மாலைகளுடன் ஸ்ரீ சத்திய நாராயணர் பூஜையில் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன்,மஹா தீபாரதனையும் நடைபெற்றது. ஸ்ரீ சத்யநாராயணரை வேண்டிய அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு தமிழரின் அரச மரபை மீண்டும் உயிர்ப்பிக்கும் விழா தஞ்சாவூரில் மாமன்னர் முதலாம் ராஜ ராஜ சோழன் பிறந்தநாள் கொண்டாட்டம்

**மதுரை, நவ 1 :** தமிழரின் பெருமைமிகு வரலாற்றை, அரச மரபையும், பாரம்பரிய கலாச்சாரத்தையும் மீண்டும் மக்களின் மனதில் உயிர்ப்பிக்க பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல்வேறு வரலாற்று விழாக்களை நடத்தி வருகிறது.

இக்குழு இதுவரை பாண்டிய மன்னர்களான முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியதேவர், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியதேவர், முதலாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் அவர்களின் பிறந்தநாள் விழாக்களை பெருமையாகக் கொண்டாடியுள்ளது.

அத்துடன், ஒவ்வொரு விழாவிலும் சந்தி பூஜை, பாரம்பரிய நிகழ்ச்சிகள், வரலாற்று உரைகள், மற்றும் பண்டைய கோயில்கள் காப்பு விழிப்புணர்வு முயற்சிகள் நடத்தி வருகிறது. ஆய்வாளர் மணிகண்டன் கூறுகையில் தமிழரின் ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் வகையில், இக்குழு சோழ மன்னன் முதலாம் இராஜேந்திர சோழதேவர் அவர்களின் பிறந்தநாள் விழாவையும் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.






இம்முறை, வரலாற்றில் புதிய அத்தியாயமாக, மாமன்னர் முதலாம் ராஜ ராஜ சோழதேவரின் 1078வது பிறந்தநாள் விழா தஞ்சாவூர் பெரிய கோயிலில் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு சார்பில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் வரலாற்று ஆய்வாளர்கள், அறிஞர்கள், கலாச்சார ஆர்வலர்கள் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து வரவிருக்கும் பொதுமக்கள் பங்கேற்கவுள்ளனர். தமிழரின் பெருமைமிகு அரச மரபு, கலை, கட்டிடக்கலை, தெய்வ பக்தி ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடன் இந்த விழா நடைபெறுகிறது.

பாரம்பரியத்தை காக்கவும், வரலாற்றை மக்களுக்கு உணர்த்தவும் தொடர்ந்து பணியாற்றி வரும் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு, இவ்விழாவை மேலும் சிறப்பாக நடத்த தயாராகி வருகிறது.

## திருவோணம் சுவாமி புறப்பாடு




**தஞ்சாவூர், நவ.01:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P.கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று முன்தினம் (30.10.2025) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனமும், மாலை சுவாமி உள்புறப்பாடும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

செய்தி:

**தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## ஆதிகேசவர் பேயாழ்வார் திருத்தேர் ஊர்வலம்





நேற்று சென்னை மயிலை ஆதிகேசவர் பேயாழ்வார் திருத்தேர் ஊர்வலம் நடந்தது.

## அஷ்டதிக் பாலகர்கள் பிரதிஷ்டை, பலி பீடம் கும்பாபிஷேகம்



**திருவண்ணாமலை , நவ.1:** அண்ணாமலையார் திருக்கோயிலில் இருந்து மாடவீதியில் அஷ்டதிக் பாலகர்கள் பிரதிஷ்டை செய்து இந்திரலிங்கம் பலி பீடத்தில் தொடங்கி ஈசான்யா லிங்கம் பலி பீடம் வரை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சர்தார் வல்லபாய் பட்டேல் 150வது பிறந்த நாள்

### திசையன்விளையில் ஒற்றுமை உறுதிமொழி ஏற்பு





**திசையன்விளை,நவ.01:** திசையன்விளை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) சார்பாக, இந்தியாவின் இரும்பு மனிதர் எனப் போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு நாட்டின் ஒற்றுமைக்கான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் டி. லில்லி அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் எஸ். பலவேசகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது.நிகழ்ச்சியில் தமிழ் துறை தலைவர் தணிகை செல்வி, வணிகவியல் துறை தலைவர் ஒயிட்டன் சகாயராஜ், பேராசிரியர்கள் சண்முகம், சுப்பிரமணியன், மற்றும் அலுவலகப் பணியாளர்கள் விஜய், சிவ, கவுசல்யா, நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவமாணவிகள் உற்சாக மாக பங்கேற்று நாட்டின் ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் தேசப்பற்று குறித்த உறுதிமொழி எடுத்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்களுக்கிடையே வினாடி வினா போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி தேசப்பற்று உணர்வை ஊட்டும் வகையில் வெகு சிறப்பாகவும் ஒற்றுமையுடன் நடைபெற்றது.

## வலங்கைமானில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற வளர்ச்சி நிதி உண்டியல் வசூல்



**திருவாரூர்,நவ.01:** வலங்கைமானில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற வளர்ச்சி நிதி உண்டியல் வசூல் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற வளர்ச்சி நிதி உண்டியல் வசூலை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் ஒன்றிய செயலாளர் எஸ். எம்.செந்தில்குமார் துவங்கி வைத்தார். நிகழ்வில் சிபிஐ நகர செயலாளர் பி.ராதா, இளைஞர் பெருமன்ற ஒன்றிய தலைவர் லெனின், ஒன்றிய செயலாளர் சுதாகர், துணைத் தலைவர்கள் லெனின் ராஜ், பிரபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அயலகக் கவிஞர்களின் நூல் திரைப்பட நடிகை தேவயானி வெளியிட்டார்



திரைப்பட நடிகை தேவயானி அயலகக் கவிஞர்களின் நூல்களை அமெரிக்க முத்தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிட்டார் . உடன் பல்கலை வேந்தர் தாழை இரா . உதய நேசன் , பேராசிரியர் கவிச்சுடர் கா . ந . கல்யாணசுந்தரம், திருமதி கலையரசி உதயநேசன் , இயக்குனர் யார் கண்ணன் மற்றும் அயலகக் கவிஞர்கள்

## மக்களின் குடியுரிமையை பறிக்கும் வாக்காளர் பட்டியல் திருத்தம்

### நாட்டைக் காப்போம் அமைப்பு குற்றச்சாட்டு

**மதுரை, நவ.1:** வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் உயிர். வாக்குரிமையைப் பாதுகாப்பது என்பது குடியுரிமையைப் பாதுகாப்பதாகும். இந்த அடிப்படையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணி குறித்து மதுரையில் நாட்டைக் காப்போம் அமைப்பபின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர். சி.ஜே.ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையானது.

இந்தியா முழுவதும் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு உட்பட10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் என 12 இடங்களில் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் திருத்தம் நடத்தப்பட உள்ளது.

போலி பெயர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்குவதற்காக சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவிக்கிறது. 1951 - 2004 வரை எட்டு முறை தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்பட்டுள்ளது. கடைசியாக சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்பட்டு 21 வருடங்கள் ஆகிவிட்டது என்கிறது தேர்தல் ஆணையம். ஆனால், நிஜமான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதாகவும் காங்கிரஸ் குற்றம் சுமத்தியிருந்தது. இதை பீகார் வாக்காளர் பட்டியலின் திருத்தத்தின்போதே உணரவும் முடிந்தது.



பீகார் மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்ற SIR நடவடிக்கையின் போது சுமார் 68.6 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். தலித், முஸ்லிம், பெண்கள் உள்ளிட்ட சமூகங்களின் பெயர்கள் குறிவைத்து நீக்கப்பட்டதாக பல்வேறு புகார்கள் எழுந்தன. அங்குள்ள மக்கள், சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் சில அரசியல் கட்சிகள், இது “குடியுரிமையினை பறிக்கும் மறைமுக முயற்சி” எனக் கண்டித்தன. இதனால் வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மை குறித்து பெரும் சந்தேகங்கள் எழுந்தன.

இந்த நிலையில். இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் அக்டோபர் 28 முதல் தொடங்கியுள்ள “சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) நடவடிக்கையானது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் குடியுரிமைக்கும் எதிரானதாக உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் ஆளும் நடுவன் அரசின் விருப்பங்களுக்கு இணங்கச் செயல்பட்டதாக பீகாரில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்நிலையில் அதே நடைமுறை தமிழ்நாட்டில் தொடங்கப்படுவது, வாக்குரிமை மீதான நேரடி தாக்குதலாகவும், குடியுரிமை மீதான மறைமுக அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது என “நாட்டைக் காப்போம்” அமைப்பு கருதுகிறது.

இந்திய அரசியலமைப்பின் 326வது பிரிவு, “ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், மதம், சாதி, பாலினம் அல்லது பிற அடையாளங்களால் விலக்கப்படாமல் வாக்களிக்க உரிமை பெற்றிருப்பர்” என கூறுகிறது. ஆனால் பீகாரில் நடந்த நடவடிக்கைகள் இந்த அடிப்படை கோட்பாட்டையே சிதைத்துள்ளன.

தற்போது SIR நடவடிக்கையைப் பற்றிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. அதில், ‘தேர்தல் ஆணையமானது, ’சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) நடத்துவதற்கான அதிகாரத்தினை யாரிடமிருந்து பெற்றுள்ளது? மற்றும், ‘வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ள நபர்களது குடியுரிமை தொடர்பான கேள்விகளைக் கேட்பதற்கான அதிகாரம்’ யாரளித்தது போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. மேற்கூறிய அடிப்படைக் கேள்விகளுக்கான தெளிவு கிடைக்கப்பெறாத நிலையில், தேர்தல் ஆணையம் அவசரகதியில், 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் SIR நடைபெறுவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருப்பது சனநாயகத்தைக் கேலிக் குள்ளாக்குவதோடு, உள்நோக்கம் கொண்ட செயல்பாடாகவே தென்படுகின்றது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது அவசியமானது. ஆனால் இன்றைய தேர்தல் ஆணையத்தின் மீது அரசியல் சாயம் ஏற்பட்டிருப்பது மிகவும் கவலையளிக்கிறது. எனவே திருத்த நடவடிக்கை சிவில் சமூகங்கள், சமூக நிபுணர்கள், மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றின் கண்காணிப்பில், மாநில அளவில் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையில், எந்தவித அவசரமும் இல்லாமல் மக்களுக்கு இதனைக் குறித்து முழுமையாக விளக்கமளித்து, மக்கள் பங்கேற்புடன் வெளிப்படையாக நடத்த வேண்டும். இதன் மூலம் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்வார்கள் அத்தோடு வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையானது உறுதியாகும்.

சிறப்பு தீவிர திருத்தத்திற்கான அவசியத்திற்கு தேர்தல் ஆணையம் பல்வேறு காரணங்களைப் பட்டியலிட்டுள்ளது.. விரைவான நகரமயமாக்கல், மக்கள் இடப்பெயர்வு, இளைஞர்கள் வாக்களிக்க தகுதி பெறுவது, வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினரை நீக்குவது ஆகியன தேர்தல் ஆணையத்தின் இலக்காகக் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் வாக்காளர் பட்டியல் திருத்தம் அரசியலமைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும்; சமூக அல்லது மத அடிப்படையில் வாக்காளர் நீக்கங்கள் ஏற்க முடியாது; மக்கள் நம்பிக்கை பெறும் வகையில் பொது ஆலோசனைகள் மற்றும் தெளிவான வழிகாட்டுதல்கள் என்பது அவசியம்.

"வாக்குரிமை" என்பது நம் "குடியுரிமை"யின் அடையாளம். அதை பறிப்பது, நம் ஜனநாயகத்தின் உயிரையே பறிப்பதாகும். அதன் அடிப்படையில் உச்சநீதிமன்ற தீர்ப்பு வரும்வரை S.I.R நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். வாக்காளர் நீக்கங்கள் எந்த சமூக அடிப்படையிலும் நடக்கக் கூடாது. தேர்தல் ஆணையம் ஜனநாயக நம்பிக்கையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாட்டைக்காப்போம் அறிக்கையில் கூறியுள்ளார்.

வழக்கறிஞர்.சி.ஜே.ராஜன் ஒருங்கிணைப்பாளர் நாட்டைக் காப்போம் 9994367521 என்ற நம்பரில் தொடர்பு கொள்ளலாம் என அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# நீர்வரத்து சீரானதால் 13 நாட்களுக்கு பிறகு சுருளி அருவியில் குளிக்க அனுமதி



**கூடலூர், நவ.01:** தேனி மாவட்டம் கம்பம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சுருளி அருவி அமைந்துள்ளது. இங்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மேலும் சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் இங்கு புனித நீராடி செல்கின்றனர். அமாவாசை உள்ளிட்ட நாட்களில் பொதுமக்கள் தங்கள் முன்னோர்களுக்கு இங்கு தர்ப்பணம் கொடுத்து வழிபாடு நடத்துகின்றனர்.

மேகமலை, தூவானம் உள்ளிட்ட நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த தொடர்மழையால் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் கடந்த 18ம் தேதி சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. அதன் பின்னர் தொடர்ந்து வெள்ளப்பெருக்குஏற்பட்டதால் தடை தொடரும் என வனத்துறையினர் அறிவித்தனர்.

மேலும் நீர்வரத்தையும் அவர்கள் கண்காணித்து வந்தனர்.

கடந்த சில நாட்களாக மழைப்பொழிவு வெகுவாக குறைந்துள்ளது. இதனால் சுருளி அருவியில் நீர்வரத்து சீரானது. அதனை தொடர்ந்து 13 நாட்களுக்கு பிறகு அருவியில் குளிக்க அனுமதி வழங்கப்படுவதாக வனத்துறையினர் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து உள்ளூர் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாக சுருளி அருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 44.80 அடியாக உள்ளது. 9 கனஅடி நீர் வருகிற நிலையில் திறப்பு இல்லை.

சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது. வரத்தும், திறப்பும் 119 கனஅடி.

சண்முகாநதி அணையின் நீர்மட்டம் 52.30 அடியாக உள்ளது. 7 கனஅடி நீர் வருகிறது. 14.47 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. மழை எங்கும் இல்லை.

# கஞ்சா கடத்தலில் சர்வதேச கும்பல்: பிடிக்க முடியாமல் சுங்கத்துறை திணறல்



**சென்னை, நவ.01:** வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு கஞ்சா கடத்தி வரப்படுவதன் பின்னணியில் உள்ளவர்களை கண்டுபிடிக்க முடியாமல், சென்னை சுங்கத்துறை அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

சென்னை விமான நிலையத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்தபடி உள்ளன. சுங்கத்துறை அதிகாரிகள், கடத்தலில் ஈடுபடுவோரை பிடித்து, கஞ்சாவை பறிமுதல் செய்து வருகின்றனர். சுற்றுலா விசாவில் வெளி நாடுகளுக்கு செல்வது போல், பலர் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை சுங்கத்துறை அதிகாரிகள் பிடித்தாலும், அவர்களின் பின்னணியில் உள்ளவர்களை கண்டுபிடிக்க முடியாமல் திணறி வருகின்றனர்.

பொதுவாக கைது செய்யப்படுவோரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, அதிகாரிகள் சிறையில் அடைப்பர். கடத்தல் பின்னணியில் உள்ளவர்களை பிடிக்க, தனி குழு அமைத்து தேடுவர். ஆனால், சென்னை சுங்கத்துறை அதிகாரிகள் சரியான முயற்சி எடுக்காமல் இருப்பதே, கடத்தல் அதிகரிப்பதற்கு காரணம் என, குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால், வரும் நாட்களில் கஞ்சா புழக்கம் தமிழகத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது குறித்து, சுங்கத்துறை அதிகாரிகள் சிலர் கூறியதாவது: போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு, தங்கத்தை விட நான்கு அல்லது ஐந்து மடங்கு கமிஷன் தொகை அதிகமாக கிடைக்கிறது. இதனால் புது வியூகங்களை வகுத்து, கடத்தலில் ஈடுபடுகின்றனர். முன்பு குறிப்பிட்ட சில நாடுகளில் இருந்து வரும் விமானங்களில் அதிகம் கஞ்சா கடத்தப்படும். கடத்தி வருவோரை எங்களுக்கு கிடைக்கும் உளவு தகவல் அடிப்படையில் பிடித்து விடுவோம்.

சமீப மாதங்களாக, கடத்தல்காரர்கள் புது வழிமுறையை பின்பற்றுகின்றனர். முன்பு, அதிக அளவில் தாய்லாந்தில் இருந்து நேரடியாக, சென்னை வரும் விமானத்தில் கடத்தல் நடக்கும்; தற்போது தாய்லாந்தில் இருந்து இலங்கை சென்று, அங்கிருந்து சென்னை வரும் விமானத்தில் போதைப் பொருட்களை கடத்தி வருகின்றனர்.

கடத்தல்காரர்கள் பிடிபட்டாலும், அவர்களின் சர்வதேச 'நெட்வொர்க்' விபரங்களை கண்டறிவது சவாலாக இருக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.






# விமானம் செங்குத்தாக புறப்பட, தரையிறங்க புதிய தொழில்நுட்பம்

## சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் அசத்தல்



**சென்னை, நவ.01:** விமானம் செங்குத்தாக புறப்படவும், தரையிறங்கவும் உதவும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில், விமானங்கள் தரை இறங்குவதற்கு பல ஆயிரம் அடி நீளம் கொண்ட நீண்ட ஓடுபாதைகள் தேவையாக உள்ளன. ஓடுபாதை நீளம் அதிகமாக இருந்தால் மட்டுமே, பெரிய அளவிலான விமானங்கள் தரை இறங்கவும், புறப்படவும் முடியும். இதனால் இடப் பற்றாக்குறையுள்ள நகரங்களில் விமான நிலையம் அமைப்பது பெரும் சவாலாக இருக்கிறது.

இதற்கு தீர்வு காணும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை சென்னை ஐ.ஐ.டி., ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இதை உருவாக்கிய சென்னை ஐஐடி விண்வெளி பொறியியல் துறை பேராசிரியர் பி.ஏ.ராமகிருஷ்ணா, இணை பேராசிரியர் ஜோயல் ஜார்ஜ் மனதரா, ஆராய்ச்சியாளர் அனந்து பத்ரன் ஆகியோர் கூறியதாவது:

நாங்கள் உருவாக்கியுள்ள தொழில்நுட்பத்தைபயன்படுத்தி, விமானம்நின்றஇடத்தில்இருந்தே செங்குத்தாக மேலே எழும்பி பறக்க முடியும். முன்னோக்கி செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. இறங்கும்போதும், அதுபோலவே செங்குத்தாக இறங்கி விட முடியும்.

விமானம் தரையிறங்க நீண்ட ஓடுபாதைகள் தேவையில்லை. பெரிய விமான நிலையங்களை அமைக்க முடியாத கரடுமுரடான நிலப்பரப்புகளில் கூட இந்த தொழில்நுட்பம் உதவிகரமாக இருக்கும்.

பல்வேறு இடங்களுக்கு விமான போக்குவரத்து சேவை சென்று அடைய முடியும். இந்த தொழில்நுட்பம் ராணுவ போக்குவரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஹைப்ரிட் ராக்கெட் உந்துவிசையைப் பயன்படுத்தி, விமானத்தை செங்குத்தாக உயரே செலுத்தவும், மென்மையாக தரையிறக்கவும் முடியும். தொலைதூரப் பகுதிகளுக்கும் விமானங்கள் சென்று வருவதில் புரட்சியை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.தாங்கள் உருவாக்கிய தொழில்நுட்பத்தை, சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக சோதனை செய்து காட்டியுள்ளனர். அவர்களது ஆராய்சிக்கட்டுரை, விமானப் போக்குவரத்து தொடர்பான உலகின் முன்னணி ஆய்விதழிலும் வெளியாகி உள்ளது.

### செய்யாறு அருகே மேல் சீஷமங்கலத்தில்

# அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் மகா கும்பாபிஷேகம்





**செய்யாறு நவ .1:** செய்யாறு அடுத்த மேல் சீசமங்கலம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், மேல் சீஷ மங்கலம் கிராமத்தில் புதியதாக கட்டப்பட்ட அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மற்றும் ஸ்ரீ கருப்புசாமி ஆகிய திருக்கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு அதன் கும்பாபிஷேக பெருவிழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

கடந்த 30ஆம் தேதி மங்கள இசை உடன் தொடங்கி எண்திசை காவல் வழிபாடு,முதல் யாகசாலை பூஜை ,இரண்டாம் கால யாகசாலை பூஜை, உள்ளிட்டவைகள் நடைபெற்றன.

நேற்று காலை 10 மணிக்கு கோபுர மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அன்னதானம், மகா ஆராதனை நடைபெற்றது. பின்னர் மேல் சீச மங்கலம் முணுக்கப்பட்டு சிவனடியார்கள் திருவாசக விண்ணப்பம் மங்கள இசை கச்சேரி நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகத்தில் கலவை தவத்திரு சச்சிதான சுவாமிகள் ,ஆரணி சிவ ஸ்ரீகுமரேசன் ஆகியோர் பங்கேற்று வழிபாடு நடத்தினர். பின்னர் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கினர்.

ஆரணி மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் எஸ். ராஜ்குமார் மகா கும்பாபிஷேகத்தில் பங்கேற்றார். அவருக்கு கோயில் நிர்வாகத்தின் சார்பில் பூரண கும்ப மரியாதை அளித்து ,கும்பாபிஷேகபிரசாதம் வழங்கப்பட்டது.

மேலும் சிவாச்சாரியார் ஆடலரசு தேசிகர் மற்றும் திருமாகறல் குழுவினர், ஸ்தபதி ஏழுமலை உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். மேல் சீஷ மங்கலத்தைச் சேர்ந்த வடிவேல் ,ஆனந்தன் , பழனி,முனியன், சுரேஷ்குமார், சந்திரமோகன், மணிகண்டன் உள்ளிட்ட விழா குழுவினர், பொதுமக்கள், உள்ளிட்டோர் கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

# ரூ.10,000 லஞ்சம் வாங்கிய எஸ்.எஸ்.ஐ., உட்பட இருவர் கைது



**திருவள்ளூர், நவ.01:** விபத்து வழக்கில், லஞ்சம் வாங்கிய எஸ்.எஸ்.ஐ., உட்பட இருவரை, லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் நேற்று கைது செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அடுத்த தாராட்சி கிராமத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார். கடந்த மாதம், 14ம் தேதி தொம்பரம்பேடு பகுதியில் காரில் சென்றார். அப்போது, எதிரே வந்த பைக்கில் கார் மோதியது. இதில், அஜித்குமார் உட்பட மூன்று பேர் காயம் அடைந்தனர்.

இது குறித்து விசாரித்த ஊத்துக்கோட்டை எஸ்.எஸ்.ஐ., பாஸ்கர், விபத்து ஏற்படுத்திய காரை திருவள்ளூர் ஆர்.டி.ஓ., அலுவலகம் கொண்டு செல்ல, 10,000 ரூபாய் லஞ்சம் வேண்டுமென கேட்டுள்ளார்.

இது குறித்து, திருவள்ளூர் லஞ்ச ஒழிப்பு போலீசில், அஜித்குமார் புகார் செய்தார். லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுரையின்படி, எஸ்.எஸ்.ஐ., பாஸ்கருக்கு லஞ்சம் கொடுக்க, அஜித்குமார் காவல் நிலையம் சென்றார். அப்போது, அவர் அங்கு இல்லை.

அவரை மொபைலில் தொடர்பு கொண்ட போது, தான் வெளியே இருப்பதாகவும், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் சுகுமாரிடம் பணத்தை கொடுக்குமாறும், எஸ்.எஸ்.ஐ., பாஸ்கர் கூறியுள்ளார். அதனால், ரசாயனம் தடவிய பணத்தை, சுகுமாரிடம் அஜித்குமார் கொடுத்தார்.

அப்போது, அங்கு வந்த லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி., கணேசன் தலைமையிலான போலீசார், சுகுமாரை கையும், களவுமாக பிடித்தனர். தொடர்ந்து எஸ்.எஸ்.ஐ., பாஸ்கரும் கைது செய்யப்பட்டார். இருவரும் ஊத்துக்கோட்டைநீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தினம் ஒரு குறள்



**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.** - குறள் 122

ఊసిరున్న దనుకంగా పొడు మణకువనే
కలిమికన్న దాని ఘనత హెచ్చు. - కురల్ 122

संयम की रक्षा करो, निधि अनमोल समान ।
श्रेय नहीं है जीव को, उससे अधिक महान ॥ - कुराल 122

Kaakka Porulaa Atakkaththai Aakkam
Adhaninooung Killai Uyirkku - Kural 122

# வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் பா.ஜ.க.வின் கொள்கை- தமிழிசை



**சென்னை, நவ.01:** தமிழகத்தில் தி.மு.க.வும், பிற மாநிலங்களில் இந்தியா கூட்டணியில் இருப்பவர்களும் பீகார் மக்களை துன்புறுத்துகிறார்கள் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது:

*பீகார் மக்களை தி.மு.க.வினர் கீழ்த்தரமாக நடத்துவதாக பிரதமர் கூறியதில் என்ன தவறு இருக்கிறது?

* பீகார் மக்கள் பற்றி தி.மு.க.வினர் தரக்குறைவாக பேசியது சரித்திரத்தில் உள்ளது.

* பீகாரிகள் அறிவில்லாதவர்கள் என கே.என்.நேரு சொன்னார். டேபிள் துடைக்க, பாத்ரூம் கழுவத்தான் சரியானவர்கள் என தயாநிதி கூறினார்.

* தி.மு.க. மீது வைக்கப்படும் விமர்சனம் தி.மு.க. மீது மட்டும் தான், தமிழர்கள் மீது இல்லை என்பதை முதல்வருக்கு சொல்லிக்கொள்கிறேன்.

* தமிழர்கள் மீது பிரதமர் மரியாதை வைத்திருப்பதால்தான் செங்கோலை பாராளுமன்றத்தில் வைத்தார்.

* தமிழக முதல்வரின் வேற்றுமை அரசியல் எடுபடாது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் பா.ஜ.க.வின் கொள்கை.

இவ்வாறு அவர் கூறினார்.

# உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

## மோப்ப நாய் உதவியுடன் சோதனை



**மதுரை, நவ.01:** மதுரை ஐகோர்ட்டில் தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள 14 மாவட்டகளுக்கான வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகிறது. எனவே வழக்கு தொடர்பாக வரும் பொதுமக்கள், பல்வேறு மாவட்ட வழக்கறிஞர்கள் மதுரை ஐகோர்ட்டிற்கு வந்து செல்கிறார்கள். இதனால் ஐகோர்ட்டு வளாகம் எப்போதும் பரபரப்பாக காணப்படும்.

இந்த நிலையில் இ-மெயில் மூலமாக மதுரை ஐகோர்ட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. இது தொடர்பாக உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் ஐகோர்ட்டு வளாகத்தில் குவிக்கப்பட்டனர். முதல் கட்டமாக ஐகோர்ட்டின் நுழைவாயில் மூடப்பட்டது. உள்ளே இருப்பவர்கள் வெளியே செல்லாதவாறும், வெளியே இருந்து வருபவர்கள் உள்ளே நுழையாதவாறும் போலீசார் தடுப்பு காவலில் ஈடுபட்டனர்.

பின்னர் ஐகோர்ட்டு வளாகத்தில் வெடிகுண்டு சோதனை தொடங்கியது. இந்த சோதனை முழுமையாக முடிந்த பின்னரே கோர்ட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று போலீசார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து ஐகோர்ட்டு வளாகத்திற்கு விரைந்து வந்த வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் மோப்ப நாய் உதவியுடன் ஐகோர்ட்டு வளாகம், நீதிபதி குடியிருப்பு, நீதிமன்ற அரங்கம் உள்ளிட்ட பகுதிகளில் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதற்கிடையில் வெடிகுண்டு மிரட்டல் குறித்து மின்னஞ்சல் அனுப்பிய நபர் யார்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதனால் ஐகோர்ட்டு வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 26-ந்தேதி இதே போல ஐகோர்ட்டு பதிவாளர் இ-மெயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததும், சோதனைக்கு பின்பு புரளி என்பதும் தெரியவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் இன்று மின்தடை ஏற்படும் பகுதிகள்...



**சென்னை, நவ.01:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (01.11.2025) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

தரமணி: எம்.ஜி.ஆர். சாலை, சாந்தியப்பன் சாலை, கோதண்டராமன் தெரு, பெருங்குடி, ஓ.எம்.ஆர்., காமராஜர் நகர், குறிஞ்சி நகர், அண்ணா நெடுஞ்சாலை, நேரு நகர், கொட்டிவாக்கம், ஸ்ரீனிவாசா நகர், ஜெயேந்திரா காலனி, திருவள்ளுவர் தெரு, கற்பக விநாயகர் தெரு, சர்ச் சாலை, சி.பி.ஐ. காலனி.

பல்லாவரம்: ஜமீன் ராயப்பேட்டை, செந்தில் நகர், சக்தி நகர், குறிஞ்சி நகர், அருள்முருகன் ராமமூர்த்தி நகர்.

# கவிதை அரங்கம்!





கொடுக்கும் கொடையை
விட கொடுப்பவனின்
மனநிலையே அவனை
அடையாளம் காட்டுகிறது

கருவறை இருளுக்கும்
கல்லறை இருளுக்கும்
நடுவில் இருக்கும்
வெளிச்சமே வாழ்க்கை

என்னவெல்லாமோ
ஆகனும்னு
ஆசைப்பட்டு கடைசியில்
குழந்தையாகவே
இருந்திருக்கலாம்
என்ற ஏக்கத்தில் முடிகிறது
வாழ்க்கை

மனித நாக்கு எலும்புகள்
இல்லாததுதான் ஆனாலும்
அது ஒரு இதயத்தையே
உடைக்கும் அளவிற்கு
வலிமை கொண்டது

கருவறை இருளுக்கும்
கல்லறை இருளுக்கும்
நடுவில் இருக்கும்
வெளிச்சமே வாழ்க்கை

எதெல்லாம் வேண்டும்
என்று
பிடிவாதமாக இருந்தோமோ
அதெல்லாம் வேண்டாம்
என்று நம்மையே சொல்ல
வைக்கும் இந்த வாழ்கை


## உங்கள் வாழ்க்கையை யாருடனும் ஒப்பிட வேண்டாம்...



உங்களின் ஆம் இல்லை எனும் முடிவுகளுக்கு நடுவே
எத்தனை தூரம்...
எத்தனை வலி...
எத்தனை மகிழ்ச்சி...
எல்லாமே இருக்கின்றது.
சிந்திக்காமல் சொன்ன ஒரு “ஆம்” — பின்னோக்கி இழுத்துக் கொண்டே இருக்கலாம்...
மௌனமாகத் தலையசைத்த “ஆம்” — வாழ்நாள் வசந்தமாக மாறி இருக்கலாம்...
கண்ணீரில் பிறந்த “ஆம்” — இன்று இருளில் ஒளியாகி பிரகாசித்துக் கொண்டிருக்கலாம்....
மனமில்லாமல் சொன்ன “இல்லை” — வாழ்வை இருளில் தள்ளியிருக்கலாம்.
மௌனத்தில் மூழ்க வைத்த “இல்லை” — இதயத்தின் நிம்மதியாக நிற்கலாம்..
என்றோ கேட்ட “இல்லை” — இன்றும் வலி தந்து கொண்டிருக்கலாம்.
ஆம் இல்லை என்ற இடைவெளியில்,
நீங்கள் வென்ற கதையும்,
நீங்கள் இழந்த கதையும்..
ஒளிந்திருக்கின்றன.
ஆம் அல்லது இல்லை... எத்தனை தூரம்...
வாழ்க வளமுடன்.
என்றும் அன்புடன்,

நன்றி - ஆனந்தி

# மாப்பிள்ளை



சார்... நான் இதுவரையும் எட்டு ஜாதகம் வரை கொண்டு வந்து கொடுத்துட்டேன்.. அதுல நான்கைந்து ஜாதகம் உங்கப் பொன்னு ஜாதகத்தோடப் பொருத்தமாத்தானே இருக்கு! ஆனா எந்த ஜாதகமும் என் பொன்னுக்கு பொருந்திலேன்னு சொல்லி, ஏன் சார் இப்படி எல்லா ஜாதகத்தையும் வேண்டாம்னு சொல்றீங்க? பெண்ணின் அப்பா அண்ணாமலையிடம்தான் தரகர் சின்னத்துரை இப்படி கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அப்படின்னா, உங்கப் பொன்னுக்கு எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை வேணும்னு எங்கிட்ட தெளிவாச் சொல்லிடுங்க சார்... நான் அதுக்கு தகுந்த மாதிரி மாப்பிள்ளையை கொண்டு வந்து நிறுத்திடறேன்... நல்ல வசதியா, கை நிறைய சம்பாதிக்கிற பையனா பார்க்கட்டுமா? இல்லேன்னா வெளிநாட்டு மாப்பிள்ளையா பார்க்கலாமா?

ஏதா இருந்தாலும் கூச்சப்படாம எங்கிட்ட சொல்லிடுங்க... இதுல ஒன்னும் ஒளிவு மறைவு வேணாம்... என்றார் தரகர்..

யோவ்... என்னாய்யா பேசற... வசதி வாய்ப்பா வேணும்னு நான் ஒன்னும் உங்ககிட்ட கேட்கலையே... நீங்களா கற்பனை பண்ணிக்கிட்டு எதையாவது செஞ்சு தொலைக்காதீங்கய்யா...

பின்னே என்னா சார்... மூணு மாசமா உங்கப் பொன்னுக்கு சீக்கிரம் கல்யாணம் முடிக்கனும்னு அங்க இங்க அலைஞ்சு திரிஞ்சு மாப்பிள்ளை ஜாதகங்களை தேடி பிடிச்சு கொண்டு வந்தா நீங்க பாட்டுக்கு இது சரியில்லை! அது சரியில்லைன்னு சொல்லி நான் கொடுத்த ஜாதகம் எல்லாத்தையும் திருப்பி எங்கிட்டயே கொடுத்துட்டு வரீங்க... எனக்கு ஒன்னுமே புரியல....

திரும்பவும் கேட்குறேன்.. உங்க பொண்ணுக்கு எப்படி பட்ட மாப்பிள்ளை வேணும்... சொல்லுங்க!

சின்னத் துரை.. நான் சொல்றதை முதல்ல நல்லா புரிஞ்சுக்குங்க... எனக்கு மாப்பிள்ளையா வரவரு, நல்ல ஒழுக்கமானவரா இருக்கனும்.. எந்தவொரு கெட்டப் பழக்கமும் அவருக்கு இருக்கக்கூடாது... குறிப்பா தாடி வச்சிருக்கக்கூடாது...

என்னா சார்.. இந்த காலத்துலயும் இப்படி இருக்கீங்க! நல்லா படிச்ச பணக்கார மாப்பிள்ளையா வேணும்னு கேட்பீங்கன்னு பார்த்தா, சாதாரண ஒரு தாடி விசயத்துக்கு இவ்வளவு முக்கியம் தந்து பேசுறீங்க... உங்கள பார்த்தா எனக்கு ஆச்சரியமா இருக்கு! என் சர்வீசுல இது மாதிரி யாரும் சொல்லாத ஒரு புது மாதிரியான தகவலை நீங்க சொல்றீங்க... இந்த காலத்து வாலிப பசங்க எல்லாருமே இப்படித்தான் இளந்தாடி வச்சிகிட்டு திரியறானுங்க! தாடி வச்சிருக்கறதைதான் பெருமையா நினைக்கறாங்க! இதுதானே இளவயசு பசங்க கிட்ட இப்ப பேஷனா இருக்கு...!

சின்னத்துரை! அது எப்படியோ எனக்கு தெரியாது! எனக்கு மாப்பிள்ளையா வரவரு தாடி வச்சுக்காம இருக்கனும்... தாடி வச்சிருக்கிற பையன் என் பொன்னுக்கு மாப்பிள்ளையா வரது எனக்கு பிடிக்கல....! தயவு செஞ்சு நான் சொல்ற மாதிரி தாடி வச்சிக்காத பையனா பாருங்க! உங்களால முடியும் என்று அண்ணாமலை சொன்னதைக் கேட்ட தரகர், திருமணம் முடியற வரையிலுமாவது தாடி வச்சிக்காம தினசரி முகச்சவரம் செய்யச் சொல்லி ஒரு மாப்பிள்ளையை பேசி முடிக்க வேண்டியதுதான் என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டு அண்ணாமலையிடமிருந்து விடைபெற்று சென்றார்....

**இளங்கோவன்.**
நன்னிலம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*வசதி இல்லாதவன்*
*ஆடு மேய்க்கிறான்!*
*வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்!*

*ஆண்களை*
*அதிக தூரம் நடக்க வைக்கும்*
*விஷயங்கள் ரெண்டு?*
*ஒன்று பிகர், மற்றொன்று சுகர்!*



# தினம் ஒரு சமையல்



## இன்ஸ்டென்ஸ் கோதுமை ரவா இட்லி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சாதம் | -2 கப் |
| நல்லெண்ணெய் | -1/4 கப் |
| புளி கரைசல் | -1/4 கப் |
| மஞ்சள் தூள் | -1/4டீ ஸ்பூன் |
| உப்பு | |
| புளியோதரை பொடி | -1 டேபிள் ஸ்பூன் |
| தாளிக்க | |
| கடுகு | -1/4டீ ஸ்பூன் |
| கறிவேப்பிலை | -2 கொத்து |
| கடலைப்பருப்பு | -1 டேபிள்ஸ்பூன் |
| நிலக்கடலை | -2 டேபிள் ஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | -4 |
| பெருங்காயத்தூள் | -2 சிட்டிகை |

செய்முறை:



கடாயில் நல்லெண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு கருவேப்பிலை காய்ந்த மிளகாய் தூள் நீக்கிய நிலக்கடலை பெருங்காயத்தூள் சேர்த்து தாளிக்கவும்.
இதில் கெட்டியான புளிக்கரைசலை விட்டு மஞ்சள் தூள் உப்பு புளியோதரை பொடி அனைத்தையும் சேர்த்து கொதிக்க விடவும் என்னை பிரிந்து வரும் வரை.
கடைசியில் வடித்த சாதத்தை சேர்த்து கிளறி இறக்கவும்.

## கொள்ளுக்காய் வேளை நன்மைகள்



கொள்ளுக்காய் வேளை என்பது சிறகுக் கூட்டு இலைகள் மற்றும் கொத்தான செந்நீலமலர்களைக் கொண்ட ஒரு சிறிய செடி ஆகும். இது மருத்துவ குணங்களுக்கும், குறிப்பாக மலச்சிக்கலை போக்கவும், ரத்தத்தை சுத்தப்படுத்தவும், பயன்படுகிறது .

இது காவேளை, கொழுஞ்சி என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் வளிமண்டல நைட்ரஜனை மண்ணில் நிலை நிறுத்தும் தன்மையை கொண்டுள்ளது. நெற்பயிர்களுக்கு அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது.

இதன் வளர்இயல்பு கொள்ளுக்காய் வேளை கொழுஞ்சி வகையை சேர்ந்தது. இதன் பிறப்பிடம் ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், ஆப்பிரிக்கா, ஆசியா இந்தியத் தீவுகள் ஓமன், அமெரிக்கா, தென் அமெரிக்காவில் பிரேசில் போன்ற நாடுகளில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் சாலையோரங்களில் தானாக வளரும் சிறு செடி இனம். நெல்லிற்கு அடியுரமாகவும் பயன்படும்.

இது சிறந்த மருத்துவகுணம் உடையது. எதிர்பாற்றலும் ஊட்டமும் கொடுக்கக்கூடியது. விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது.

மருத்துவ பயன்கள்

இதன்வேர், பட்டை இலை, விதை ஆகியவை மருத்துவ பயன் உடையது. கோழையை அகற்றுதல், மலத்தை இழக்கும். தாது ஊக்கமூட்டும், சீதபேதி, அகற்றும் பூச்சியை வெளியேற்றும், வாயுவை நீக்கும். நரம்பு மண்டலத்தை ஊட்ட முடியதாக்கும். விஷத்தை முறிக்கும். குடல் புண் குணமாகும். சிறுநீர் பெருக்கும்.

வீக்ககட்டிகளை கரைக்கும், இரத்தம் மூலம் வியாதியை போக்கும். மேக வியாதி / இருதயநோய் குஷ்டம் /ஆகிய வியாதிகளை குணமாக்க வல்லது.

இந்த வேரை இடித்துச் சூரணம் செய்து சிமிலியில் வைத்து நெருப்பிட்டு புகையை உள்ளுக்கு மூக்கில் வைத்தால் அதிக கபம், இருமல், இரைப்பு நெஞ்சடைப்பு குணமாகும்.

இதன் வேருடன் சமஅளவு மஞ்சள், அரிசி கழுவிய தண்ணீர் அல்லது பசுவின் பால் விட்டு அரைத்து கண்ட மாலையுடன் உண்டான வீக்கத்திற்கு போட்டு வந்தால் குணமாகும்.

இதன் வேரை 2 கிராம் எடுத்து மோர் விட்டு அரைத்து குடித்தால் வீக்கம், ரத்தக் கெடுதலால் உண்டாகும் முகப்பரு கட்டி ராஜப் பிளவை முதலியன குணம் ஆகும்.

இதன் வேரை தூளாக்கி மென்று சாற்றை விழுங்கி வெந்நீர் அருந்தினால் எவ்வகை வயிற்று வலியும் குணமாகும்.

# வெங்கட் பிரபு - சிவகார்த்திகேயன் படத்தின் அப்டேட்.. ரசிகர்களுக்கு ஹேப்பி நியூஸ்!



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக புகழின் உச்சத்தில் வலம் வருகிறார் நடிகர் சிவகார்த்திகேயன். தற்போது பராசக்தி என்ற திரைப்படத்தை கைவசம் வைத்துள்ளார்.

அடுத்த ஆண்டு பொங்கலுக்கு பராசத்தி திரைப்படம் வெளியாக உள்ளது.

சிவகார்த்திகேயன் அடுத்து வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இப்படம் ஒரு டைம் டிராவல் கதைக்களத்தில் உருவாக இருக்கிறது.

இந்நிலையில், இப்படத்தின் நாயகி குறித்து ஒரு அதிரடி அப்டேட் கிடைத்துள்ளது.

அதாவது, இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக ‘லோகா’ பட நடிகை கல்யாணி பிரியதர்ஷன் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சினிமா



வெள்ளை நிற உடையில் கலக்கும் நடிகை ராஷ்மிகாவின் லேட்டஸ்ட் ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ,

# சர்ச்சையில் சிக்கினாலும் வசூலில் பட்டையை கிளப்பிய Dude.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



அறிமுக இயக்குநர் கீர்த்திஸ்வரன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் உருவாகி வெளிவந்த Dude படம், பாக்ஸ் ஆபிஸில் பட்டையை கிளப்பி வருகிறது.

இப்படத்தில் மமிதா பைஜு, சரத்குமார் ஆகியோர் நடித்திருந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த இப்படம் சர்ச்சையில் சிக்கினாலும், இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வெற்றியடைந்துள்ளது.

லவ் டுடே, டிராகன் மற்றும் Dude என தொடர்ந்து மூன்று ரூ. 100 கோடி வசூல் படங்களை பிரதீப் ரங்கநாதன் கொடுத்துள்ளார். இந்த நிலையில், 14 நாட்களில் இப்படம் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, Dude 14 நாட்களில் உலகளவில் ரூ. 111 கோடி வசூல் செய்துள்ளது.

இப்படத்தின் இறுதி வசூல் எவ்வளவு வரும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com